# <u>பத்திரிக்கை செய்தி</u>

**மாற்றுத் திறனாளிகளுக்கு முதலமைச்சர் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் வருமான வரம்பின்றி சிகிச்சை வழங்க உத்தரவிட்டவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான்.**

**சென்னை, அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலையத்தில் நடைபெற்ற அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் புகழாரம்!**

அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா மற்றும் செயற்கை அவயங்கள் நிலைய பொன் விழா ஆகியவை கே.கே. நகர், அரசு மறுவாழ்வு மருத்துவ நிலையத்தில், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டனர். பின்னர் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் விழா மலரை வெளியிட்டு, சாதனை புரிந்த அலுவலர்கள், சமூக ஆர்வலர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை வழங்கி விழா பேரூரை ஆற்றினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இயங்கி வரும் தமிழக அரசு, மருத்துவத் துறையில் ஒரு முன்னிலை மாநிலமாக இல்லாமல், ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மேலும், வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதார தரத்தை அடைய வேண்டும் என்ற குறிக்கோளில் தமிழகத்தில் மருத்துவப் புரட்சி நடைபெற்று வருகிறது.

கல்வித் துறைக்கு அடுத்தபடியாக மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஆண்டு ரூ. 7005 கோடி ஒதுக்கப்பட்டு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதிநிலை ஒப்பிடும் பொழுது இது 67% ஆகும். மாற்றுத் திறனாளிகள் துறை ஒரு முன்னோடி துறையாக விளங்கி மாற்றுத் திறனாளிகளின் குறைகளைப் புரிந்து அவர்களின் உரிமைகளுக்காக உதவிகளை உருவாக்கித் தருகிறது. 50 ஆண்டு பாரம்பரிய மிக்க அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலையம், சென்னை மருத்துவக் கல்லூரியுடன் சேர்ந்து பணியாற்றி வருகிறது. மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான மருத்துவம், சமூகநலம் மற்றும் வாழ்க்கைத் திறன் சார்ந்த தொழிற்கல்விகளைப் பயிற்றுவிப்பதில், நம் நாட்டின் மிகப்பெரிய புனர்வாழ்வு மையமாக செயல்பட்டு வருவதோடு மட்டுமல்லாது, ஒருங்கிணைந்த புனர்வாழ்வு சேவையை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வருகிறது.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் இயங்கி வரும் இந்த அரசின் திட்டங்களால் மாற்றுத் திறனாளிகளுக்கான சராசரி விகிதம் தமிழ்நாட்டில் 1.75 சதவீதமாக உள்ளது. மற்ற மாநிலங்களில் இது 2.51 சதவீதமாக உள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் மாற்று திறனாளிகளுக்கு வருமான உச்சவரம்பின்றி சிகிச்சைகள் பெற உத்தரவிட்டவர் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள்தான். **அம்மா** அவர்களுக்கு இந்த நேரத்தில் மாற்றுத் திறனாளிகள் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகள் பயன் பெறும் வகையில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீடு, பள்ளி படிப்பு பயில உதவித் தொகை ரூ.50லிருந்து 2000 வரையிலும், பட்டப்படிப்பு பயில உதவித் தொகை ரூ.3000, பட்ட மேற்படிப்பு பயில உதவித் தொகை ரூ.8500, இருகால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு மோட்டார் பொருத்திய வண்டிகள் ஆகியவை வழங்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக, பள்ளிப்படிப்பு பயில ரூ.1000ம், பட்டப்படிப்பு பயில ரூ.1500ம், பட்ட மேற்படிப்பு பயில ரூ.2000ம், தொழில் கல்வி பயில ரூ.4000ம் வழங்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்பினை உருவாக்கிக் கொள்ள தேவையான உதவிகளை இந்த அரசு செய்து வருவதோடு, மாற்றுத் திறனாளிகளின்பால் அன்பு கொண்டு அவர்களின் வாழ்வில் ஒளி மலர வேண்டுமென்ற எண்ணத்துடன் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலுடன் எந்த மாநிலத்திலும் இல்லா வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் மருத்துவ மறுவாழ்விற்கென, செயற்கை அவயங்கள், ஊன்றுகோல்கள், சக்கர நாற்காளிகள், மூன்று சக்கர சைக்கிள்கள் ஆகியவை வழங்கப்படுகிறது. இந்நிலையத்தில் அக்டோபர் 2014 வரையில், இயன்முறை மருத்துப் பிரிவில் 17,766 மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர், 312 நபர்களுக்கு செயற்கை அவயங்கள் மானிய விலையிலும், 458 மாற்றுத் திறனாளிகளுக்கு சான்றுகளும், 405 நபர்களுக்கு இரயில்வே பயணச்சலுகைச் சான்றுகளும், 407 நபர்களுக்கு மாற்றியமைக்கப்பட்ட வாகனங்கள் ஓட்டுவதற்கான தகுதி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, உரிய சான்றிதழ்கள், அடையாள அட்டைகள், நலத்திட்ட உதவிகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. இங்கு பேசிய மாற்றுத்திறனாளி திரு. ஜஸ்டீன் அவர்கள் மன உறுதியோடு பல சாதனைகளை செய்து பல விருதுகளை பெற்று மற்றவர்களுக்கு முன்னோடியாக திகழ்வது இந்த சமுதாயத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்தவும், வளப்படுத்தவும், சமுதாயத்தில் சமஉரிமை அளித்து அவர்களது தன்னம்பிக்கை வளரவும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தேவையான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது எனக்குறிப்பிட்டார்.

முன்னதாக மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமைவுரையும், மருத்துவக்கல்வி இயக்குநர் டாக்டர் கே. கீதாலட்சுமி, முன்னாள் இயக்குநர் டாக்டர் ரவீந்திரநாத், தமிழ்நாடு ஜவுளிக்கழக தலைவர் திரு. வி.என். ரவி, தேசிய விருது பெற்ற மாற்றுத்திறனாளி திரு. ஜஸ்டின், அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலைய முன்னாள் இயக்குநர், மரு. கு. ஜனார்த்தனம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். அரசு புனர்வாழ்வு மருத்துவ நிலைய தலைவர் மரு. ச. ரமேஷ் வரவேற்பு உரையும், மரு. எஸ். சம்பத்குமார் நன்றி உரையும் ஆற்றினார்கள்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**

*******